DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

| | | |
|---|---|---|
| CC. / STC. / MC./ DVC. No | : | **CC. 177/2021** |
| Miscellaneous | : | - |

Deposition of **PW – 3 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. பூரணி |
| Father's Name | : | க/பெ செல்வம் |
| Village | : | தும்பல் |
| Taluk | : | பெத்தநாயக்கன்பாளையம் |
| Calling | : | கூலி |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **13.06.2024.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம் 01.15

1) நான் தும்பலில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும் பார்த்துள்ளேன். சாட்சி பொன்னுசாமியை தெரியும். இந்த விபத்தில் இறந்தவரை நான் பார்த்திருக்கிறேன்.

2) சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மதியம் 01.00 மணியளிவில் தும்பல் சந்தைபேட்டையிடம் நான் பனியாரம் சுட்டு வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது விபத்தில் இறந்தவர் அந்த வழியாக சென்றார். பிறகு 01.15 மணியளவில் ஒருவர் கீழே விழுந்து கிடப்பதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

3) நான் பனியாரம் சுட்டுக்கொண்டிருந்த இடத்திற்கும் அவர் விழுந்து கிடந்த இடத்திற்கும் ஒரு 50 மீட்டர் தூரம் இருக்கும் நானும்சென்று பார்த்தேன். அங்கு கூட்டமாக இருந்தது. அவர் இறந்துகிடந்தார். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். அதன்பேரில் நீதிமன்றம் பின்வரும் கேள்வியை முன் வைக்கிறது.**

**நிதிமன்ற கேள்வி**

1) நான் கடை வைத்துளள இடத்தில் எவ்வளவு நாட்களாக கடை வைத்துள்ளேன் என்றால் சுமார் 7 வருடங்களாக கடை வைத்துள்ளேன். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் பையன் மட்டும் என்னுடன் இருக்கிறார். எனது கணவர் இறந்துவிட்டார்.

2) நான் கடை வைத்துள்ள இடத்திலிருந்து 200 அடி தூரத்தில் இருபக்கமும் என்ன நடக்கிறது என்று என்னால் பார்க்க முடியும் என்றால் பார்க்க முடியும். நான் கடை நடத்துவதால் வியாபாத்தைதான் நான் கவனித்தேன். என்ன நடக்கிறது என்று அன்று பார்க்கவில்லை.

3) நான் கடைவைத்துள்ள இடத்திலிருந்த அவர் விழுந்துகிடந்த இடத்தை பார்க்க முடியும் என்றால் எழுந்து நின்றால் பார்க்கமுடியும். உட்கார்ந்துக்கொண்டு பார்க்கமுடியாது நான் அன்று உட்கார்ந்துக்கொண்டுதான் இருந்தேன்.

4) கடந்த 06.08.2020 அன்று மதியம் 02.30 மணியளவில் நான், கடைவைத்துள்ள இடத்திற்கு அருகில் விபத்தில் இறந்த சின்னபையன் என்பவர் நின்றுக்கொண்டிருந்ததாகவும் அப்பொழுது அந்த சாலையில் வந்த எதிரி, அவரது பிரக் வேனை அதிகவேகமாவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து சின்னபையன் மீது இடித்துவிட்டதாகவும், இந்த விபத்தில் சின்னபையன் இறந்துவிட்டதாகவும், இந்த விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரியை எனக்கு தெரியும் என்பதால் அவரை காப்பாற்றும் நோக்கில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை -** இல்லை

முடிவு நேரம் 01.25

Taken Down by me in Open Court Read over to the depondant in the presence of the accused and admitted by the deponant to be correct

Tr. S. Munusamy B.Sc., B.L.,
Judicial Magistrate No.1,
Attur.